Arima Nokku

18:4 சனவரி 2025

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல் சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART CULTURE, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842

அரிமா
நோக்கு
18:4 சனவரி 2025

ஆசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
தே. ராஜகுமார்
த. பாலமுருகன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சங்ககாலத் திணை விளைவித்தலும் சூழலமைவும் - சு. திலகவதி 04
சிறுவர் இதழ்கள் ஆய்வு - பெ. பவானி 11
சூல் நாவல் காட்டும் உருளக்குடி மக்கள் வாழ்வியல்
முனைவர் த. செந்தாள் 19
தேசிங்கு ராஜன் கதைப்பாடலில் : வாய்பாடு - அ. வினிதா 32
இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள்
மானிடவியல் அணுகுமுறை - க. விஜயகுமாரி 36
மாடு சார்ந்த மருந்து மருத்துவம்
கு. வெருதராஜ் - முனைவர் செ.இளையராஜா 40
மூப்பிலிசி வைடிக்கும் பருவம் கவிதைகளில் பெண்கள்
ச. நாகராஜன் - முனைவர் ப. கண்ணறுமுத்து 49
தமிழர் பண்பாட்டில் கிராமிய வழக்காறுகள்
சி. விநாயக மூர்த்தி 51
வேலராமமூர்த்தியின் அரியநாச்சி நாவல் வெளிப்படுத்தும்
குடும்ப அமைப்பு முறைகளும் சிக்கல்களும்
சி. ஜெயப்பிரகாஷ் - முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா 54
தமிழிலக்கிய வகைமையில் தலபுராணங்கள் - செ. யுவஸ்ரீ 58
ஆனைமலை வட்டார நாட்டுப்புற மருத்துவம்: பெண்கள்
மா. செந்தில் குமார், முனைவர் வெ. பன்னீர் செல்வம் 62
சிலப்பதிகாரமும் கண்ணகி வழக்குரைக் காப்பியமும்
முனைவர் அ. மகபூப் 66
இயற்கை நோக்கில் தமிழர்சால்பு - முனைவர் கி. ராம்கணேஷ் 71
தமிழ் இணைய இதழ்களின் வகைப்பாடும், சிறப்புகளும்
முனைவர் ந. ஞானமணி 74
இலக்கிய வகைமை நோக்கில் பழனித் திருவாயிரம்
முனைவர் ந. அரவிந்த்குமார் 78
சங்க மாந்தரின் காலக் கணிப்பான்
முனைவர் பா. ஷியாமளாதேவி 83
சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை
முனைவர் மா. கார்த்திகேயன் 86
தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்-முனைவர் இரா.வனிதாமணி 89
திருத்தக்கத் தேவர் பார்வையில் அமைச்சர் - முனைவர் க. ர. லதா 93
உளவியல் நோக்கில் சிவப்பிரகாசப் பாடலில்
தனிமனித மனநிலையும் சமூகமும் - முனைவர் ர. நித்யா 96
வாய்மொழி மரபில் மகாபாரதப் பிரசங்க மரபு
முனைவர் மு. ஏழுமலை 100
தலவிருட்சங்களின் தோற்றப் பின்புலமும் மருத்துவ கூறுகளும்
(திருஞானசம்பந்தர் பதிகங்கள்)-முனைவர் த.பரமேசுவரி 107
சங்கத் தமிழர் வணிகமும் வாழ்வியலும்
முனைவர் தே. ராஜகுமார் 112
திருமூலர் காட்டும் அன்பு நெறி - முனைவர் ப. கார்த்திக் 119
பிரபஞ்சன் நாவல்களில் சமூகம் - முனைவர் ச. இராஜலதா 121
உயிர்க்கோட்பாடு - உலகாயிதத்தில் உயிர்
முனைவர் த. பாலமுருகன் 125
சமயம் வளர்த்த பெண்களின் உள்ளத்து உணர்வுகள்
முனைவர் சி. கவிதா 128
தேனி, திண்டுக்கல் வட்டாரத்தில் அஞ்சரைப்பெட்டி மருந்துவம்
ப. கனகவள்ளி - முனைவர் தே. ராஜசீலி 131

# வேலராமமூர்த்தியின் அரியநாச்சி நாவல் வெளிப்படுத்தும் குடும்பஅமைப்பு முறைகளும் சிக்கல்களும்

சி. ஜெயப்பிரகாஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர், ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

## முன்னுரை

ஒரு மனிதனின் சமூக வாழ்க்கையில் குடும்பம் என்பது முக்கியப் பங்கு வகிக்கின்றது. குடும்பத்தில் ஓர் அங்கத்தினராகக் காணப்படும் தனி மனிதன் திருமணத்தின் போது பிறிதொரு குடும்பத்தை உருவாக்குகிறான். குடும்பத்தின் அமைப்பைப் பொறுத்தே ஒரு மனிதனின் மனநிலை அமைகின்றது. மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் களமாகக் குடும்பம் திகழ்கிறது. குடும்பம் என்ற அமைப்பு இல்லாத நிலையில் மனிதனின் வளர்ச்சி பின் தங்க நேரிடுகிறது. குடும்பம் என்பது தனிமனிதன், சமூகம், நாடு என எல்லாவற்றிற்கும் அடிப்படை அமைப்பாக இருக்கின்றது. இலக்கிய உணர்வானது படைப்பாளரிடம் ஏற்பட்டபோது, சமுதாயத்தைப் பற்றி சிந்திக்க குடும்ப அமைப்பையும், குடும்பச் சிக்கல்களையும் முன்வைத்துப் படைப்பிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ்வகையில் வேலராமமூர்த்தி அவர்கள் எழுதிய அரியநாச்சி நாவலில் காணலாகும் குடும்ப அமைப்பு முறைகள் குறித்தும், குடும்பச் சிக்கல்கள்குறித்தும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## குடும்பம் சொற்பொருள் விளக்கம்

மனிதன் தனது உணர்ச்சிகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு பிறருடைய உணர்ச்சிகளையும் புரிந்துகொள்ள முயன்றபொழுது சமுதாயம் தோன்றுகிறது என்று கூறுவர். இந்நிலையில் பிறருக்காக வாழும் பொழுது கூடிவாழ்தல் என்கிற குழு உணர்வு இடம் பெற்றுள்ளது. குழு வாழ்க்கையில் கட்டுப்பாடுகள், வரன்முறைகள் போன்றவை காலப்போக்கில் உருவாக்கப் பெற்றன. வரன்முறையற்ற பாலுணர்விலிருந்து விடுபட்டு, வரன்முறையான பாலுறவிற்குள் வாழத்தலைப்பட்டனர். இச்சூழலில்தான் 'குடும்பம்' என்ற அமைப்பு தோற்றம் பெற்றது. குடும்ப வாழ்க்கை, குழு வாழ்க்கை எனப் பல படிநிலைகளில் வளர்ச்சி பெற்று நாகரிகமுள்ள, பண்பாட்டுக்களம் பொருந்திய சமுதாயம் உருவாகியது எனலாம்.

இல்லறத்தை இன்றைய காலகட்டத்தில் குடும்பம் என்று குறிக்கின்றோம். "திருமணத்தின் மூலம் பிணைக்கப்பட்டு ஒரு குடியிருப்பில் கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள் போன்ற உறவு முறைகளுடன் பொதுப் பண்பைப் படைத்தும் காத்தும் வளர்ச்சியுறுவதே குடும்பம்." (ப. 452) என பிரிட்டானியக் கலைக் களஞ்சியம் விளக்கம் தருகிறது.

*"குடும்பம் எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு. குடும்பத்திலின்றும் உறவு ஏற்படுகின்றது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிப்படையாவது. இக்குடும்பம் சமுதாய வழக்காலும், சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறது."* (தொகுதி.4) என தமிழ்க் கலைக்களஞ்சியம் குடும்பத்திற்கான விளக்கம் தருகிறது

சங்க காலத்தில் "குடி" என்ற சொல்லே "குடும்பம்" என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. திருக்குறளில் "குடி" என்ற சொல் இருபத்தாறு இடத்திலும், "குடும்பம்" என்ற சொல் ஓரிடத்திலும், கையாளப்பட்டுள்ளது. ஒரு ஆணும், பெண்ணும் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து, தாம்பத்திய வாழ்க்கை மேற்கொள்வதை "குடும்பங்கள் என்றாலே தங்களுக்குள் உறவுகளுடைய ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு என்பது தெளிவு. இன்றைய கணவனும் மனைவியும் அவர்கள் குழந்தைகள் அடங்கிய மிகச் சிறிய குடும்பம் என்ற அமைப்பு" (குடும்பஅமைப்பு, ப.21) என சோ.இலக்குமிரதன் கூறுகின்றார்.

மனிதன் உள்ளத்தாலும், உடலாலும் வேறுபட்டாலும் கூட்டத்தோடு கூடி வாழ்கின்றான். இந்த நிலையில் குடும்ப உறவு என்ற அமைப்பு தோன்றியது எனலாம். எந்தவொரு மனிதனும் சமுதாயத்தில் தனியாக வாழ முடியாது. ஏதாவது ஒரு உறவில் சமுதாயத்தில் தொடர்பு கொண்டிருப்பான். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடங்கி இருக்கும் உறுப்பினர்களுக்குள்ளே உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது "குடும்பம்" என அறியலாம். குடும்பத்தின் சொல் விளக்கத்தை ஆறு இராமநாதன் அவர்கள் "குழு என்ற சொல்லிலிருந்து குடும்பம் உருவாகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது" (தமிழ்ச் சமுதாயம், ப.80) என்கிறார். இவ்வாறு குடும்ப அமைப்பின் தோற்றம் குறித்தான பதிவுகளும், குடும்பம் குறித்தான அறிஞர்களின் கருத்துக்களையும் காணமுடிகின்றது.

## குடும்ப அமைப்பு

மனிதன் தன் ஆயுட் காலத்தின் இறுதி வரையில் குடும்ப அமைப்புடன் தொடர்பு கொண்டு விளங்குகிறான். ஏனெனில் இந்நிறுவனம் மனித சமூகத்தின் உயிரியல், உளவியல் சார்ந்த அனைத்து நிகழ்வுகளையும், தேவைகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. எனவே குடும்பம் என்ற நிறுவனம் இடம், காலம், நிறம், மொழி அனைத்தையும் கடந்து அனைத்துப் பண்பாட்டு மரபுகளுக்கும் உரிய நிறுவனமாகத் திகழ்கின்றது.

குடும்பஅமைப்பு வளர்ச்சி பெறுகின்ற போது சமூகமும் வளர்ச்சி பெறுகின்றது. குடும்பத்தின் நிலை தடுமாறுகிற போது சமூகமும் மாற்றம் பெறுகின்றது. ஒருவன் குடும்பத்தில் எவ்வாறு உருப்பெறுகிறானோ அவ்வாறே சமூகத்திலும் நடந்து கொள்வான். கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் ஒருவன் வளர்க்கப்படும்போது அவனுடைய ஆளுமை செம்மைப்படுத்தப்பட்டு, அவன் சமூகத்தில் நல்லவனாக, பண்புடையவனாக, ஒழுக்கமுடையவனாக விளங்குகிறான். இச்சூழ்நிலையில் நாவல்களில் காணப்படும் குடும்பங்கள், தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் எனப் பல்வேறு நிலைகளில் அமைகின்றதைப் பார்க்க முடிகின்றது.

## அரியநாச்சி நாவலில் குடும்ப அமைப்பு

வேலராமமூர்த்தி அவர்கள் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ் இலக்கியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தான் வாழ்ந்த இராமநாதபுர மண்ணின் மீது கொண்ட ஈடுபாட்டினால் பல்வேறு கதைக்கருக்களை உருவாக்கி பட்டத்துயானை, குருதி ஆட்டம், அரியநாச்சி, குற்றப்பரம்பரை முதலான நாவல்களையும், பல்வேறு சிறுகதைகளையும் எழுதியுள்ளார். "மண்சார்ந்த வல்லமை மிக்க தனித்த ஓர் எழுத்துப்பாணியை தனதாக்கிய வேலராமமூர்த்தி பல்லாயிரம் பேரையும் இமைக்க மறந்த கேட்க வைக்கும் "மேடைக் கதை சொல்லி" என்றும், இவரது நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்ச், மலாய், கொரியன் மற்றும் சீன மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளன என்றும்" (குற்றப்பரம்பரை, பின் அட்டைப்பக்கம்) எடுத்துரைக்கிறார் வேடியப்பன்.

அரியநாச்சி நாவல் குடும்ப அமைப்பு பற்றியும், குடும்பத்தில் எழும் சிக்கல்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளது. குடும்ப அமைப்பில் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் இடம் பெறும் நிலைகள் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. அரியநாச்சி நாவலில் காணலாகும் குடும்ப அமைப்பினை இரண்டு கூறுகளாகப் பகுக்கலாம். அவை

கூட்டுக்குடும்பம் 2. தனிக்குடும்பம் என்பன.

அரியநாச்சி நாவலில் வரும் குடும்பங்கள் கிராமத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. கூட்டுக் குடும்பவாழ்க்கையில் அதிகளவில் குடும்ப உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்த சூழலை நாவலாசிரியர் நாவலின் இடையிலும், இறுதியிலும் காட்டியுள்ளார். பாண்டி, அரியநாச்சி, மாயழகி ஆகிய மூவரும் கூட்டுக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அரியநாச்சியின் தந்தையும், பாண்டியின் மாமனாரும் விவசாயம் செய்து கொண்டு தங்கள் குடும்பத்தை வழி நடத்தி வந்தனர். கொலைக் குற்றத்திற்காக ஜெயிலில் இருக்கும் தந்தையைக் காணவந்த அரியநாச்சியிடம் தனது குடும்பப் பொறுப்பை, "உன் தங்கச்சி மாயழகி, தாய் இல்லாம வளந்த புள்ள, தகப்பன் நான், ஜெயில்ல கெடக்கேன். நீயும் உன் தம்பி பாண்டியும் அந்தப்பிள்ளைக்கு எல்லாம், எந்தக் காரியம்னாலும் உன்தம்பி பாண்டிப்பயலை கலந்து பேசி முடிவு பண்ணுத்தா.." என்று எடுத்துக் கூறுவதன் மூலம் குடும்பத்தின் மீது அவர் கொண்டிருந்த பாசத்தை அறிய முடிகிறது.

அரியநாச்சி தனது கணவனிடம் தனது தங்கையை உங்கள் தம்பிக்கு மணமுடித்து விட்டால் எனக்கும் ஒத்தாசையாக இருக்கும் என்றும், மாயழகியை சோலைக்கு கட்டிவிட்டால் அவனும் பொறுப்பு உள்ளவனாக நடந்து கொள்வான் என்றும் கூறுவதன் மூலம் குடும்ப அமைப்பிற்கு உறவுகள் முக்கியம் என்பதை நாவலாசிரியர் எடுத்துரைக்கிறார் என்பதை பார்க்க முடிகின்றது. "நமக்கு கலியாணமாகி ஏழேட்டு வருசத்துக்கு அப்புறம் இப்போதான் ஒரு பிள்ளையை உண்டாகி இருக்கேன். மாயழகியை நம்ம சோலைக்கு கட்டிக்கிட்டு வந்தோம்னா... அக்காளும், தங்கச்சியும் ஒருத்தருக்கு ஒருத்தர் அம்பா... ஆதரவா...

விட்டுக்கொடுத்து நொறுந்து போயிருவோம்லெ " (அரிய நாச்சி நாவல், ப.26) என்று பேசுவதன் மூலம் குடும்பத்தில் உறவு நிலைக்க வேண்டும் என்பது காட்டப்படுகிறது. பாண்டி மற்றும் இராமாயி இருவரும் தங்கை மாயழகியை இராமாயின் தம்பி கருப்பையாவுக்கு மணம் முடிக்க எண்ணுகின்றனர். இவர்களும் குடும்ப அமைப்பில் கூட்டுக்குடும்ப உறவை பெரிதும் விரும்பினர் என்பதை அறிய முடிகிறது.

## அரியநாச்சி நாவலில் வெளிப்படும் குடும்பச் சிக்கல்கள்

குடும்பம் என்ற எல்லையுள் உறவுகளும், உணர்வுகளும் ஒன்றையொன்று சார்ந்தும் தனித்தும் இயங்கும் சூழல்களில் ஏற்படும் சிக்கல்கள் குறித்தான கருத்துக்களை நாவல் வழி எடுத்துரைக்கப்படுகின்றன. சமுதாய மதிப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் குடும்ப எல்லையுள் சில பாதிப்புகளைக் கொண்டு வந்து சேர்க்கலாம். மரபு வழிப்பட்ட குடும்பங்களில் இம்மாற்றங்களும் மெல்லவே கால்கொள்ளுகின்றன. காலநதி நாவலில் குடும்பங்கள் பெரும்பாலும் நடுத்தரக் குடும்பங்கள் சார்ந்தவைகளாக அமைந்துள்ளன. நாவலில் அமைந்துள்ள குடும்பச் சிக்கல்கள் இருவகைப்படும். அவை,

தீர்வுக்குரியவை, 2. தீர்வு காண இயலாதவை

என்பவையாகும். கால நீட்சியின்றி, தோன்றி மறையும் வகைப்பட்ட சிக்கல்கள் தீர்வுக்குரியவை. இவை நாவல் மாந்தர்களின் உள்ளப் பக்குவத்தை ஒட்டி தீர்வுக்குரியவையாகின்றன. பழைமைச் சுவடுகளின் ஆழப்பதிவில் நிரந்தரப் பிரச்சினைகளாக அமைபவை, கால வரையறையின்றி அமைகின்றன. இவை பெண்கள் மனதில் நிரந்தர வடுவாகத் தங்கி விடுவதால் தெளிவான தீர்வு காண இயலாப் போக்குடையனவாகின்றன.

## உறவு நிலைச் சிக்கல்கள்

அரியநாச்சி நாவல் கூட்டுக் குடும்பத்திலும், தனிக் குடும்பத்திலும் காணலாகும் குடும்ப உறவுகளையும், சிக்கல்களையும் எடுத்துரைத்துள்ளது. பொதுவாக உறவுகள் சேரும் பொழுதும், விலகும் பொழுதும் சிக்கல்கள் எழுவது இயல்பு. அச்சிக்கல்கள் பின்வரும் நிலைகளில் வெளிப்படுவதை நாவல் வாயிலாக அறிய முடிகிறது

கணவன் - மனைவி உறவுநிலை

தந்தை – மகன் உறவுநிலை

தந்தை – மகள் உறவுநிலை என்பவனாகும்.

## அரியநாச்சி நாவலில் கணவன் - மனைவி உறவுநிலை

ஒத்த அன்பினையுடைய தலைவன், தலைவி இணைகின்ற வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகும். அவ்வாழ்வில் அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைந்து வாழ்வதே சிறந்த வாழ்வாகும். என்பதை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது** (குறள்.45)

என்னும் குறள் வழி அறியலாம்.

**இறைவழியையும் இயற்கை நோக்கையும் படைப்பமைப்பையும், இன்னோரன்ன பிறவற்றையும் கூர்ந்து நோக்குழி, ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் கூடி வாழ்தலே அறம் என்பது புலப்படும். அதுவே வாழ்விற்குரிய இயற்கையாதலின் அதனை இயற்கை அறம் என்ற தலைப்பில் பொறித்தேன்.** (பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம், ப.178) என்று திரு.வி.கலியாண சுந்தரனார் இல்லறத்தை இயற்கை அறம் என நிறுவியதைக் காணமுடிகின்றது. இதன் மூலம் இல்லறம் என்பது குடும்பத்தை வழிநடத்தும் பாங்கு என்பதும், அன்பும், அறமும் மேலோங்கியிருத்தல் வேண்டும் என்பதும், எந்நிலையிலும் பிரிதல் கூடாது என்பதும் வலியுறுத்தப் பட்டுள்ளது. அரியநாச்சி நாவலில் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்னும் இரண்டு நிலைகளிலும் கணவன் மனைவி உறவு நிலைகள் சுட்டப்பட்டுள்ளன. கூட்டுக்குடுமபத்தில் பாண்டியும், இராமாயியும் தனிக்குடும்பததில் அரியநாச்சியும், சர்க்கரைத்தேவனும், இடம் பெற்றுள்ளனர். இவர்களது வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டும் மாறிமாறி வருகின்றதை நாவலாசிரியர் சுட்டிச் செல்கிறார். பாண்டி குமராயி இருவரும் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் சிறந்து விளங்கியதை நாவலாசிரியர் வழி அறியமுடிகிறது. பாண்டி குடும்பத்திற்காக அனைத்தையும் சுமக்கும் ஒர பக்குவமுள்ள மனிதனாக வலம் வருகின்றதை காண முடிகிறது. தனத தங்கையாகிய மாயழகியை தனது மைத்துனனுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணும்போது குடும்பத்தில் சிக்கல் எழுகிறது தனது மனைவியின் பேச்சால் அவன் கட்டுண்டு விடுகிறான். இராமாயி குடும்ப வாழ்கையில் சிறந்தவளாக இருந்தாலும், தனது தம்பிக்கு மாயழகியை மணம் முடித்து வைப்பதிலேயே குறிக்கோளாக இருந்து வந்தாள் என்பதை,

"ஆத்தாக்காரி சொல்வதை காதிலேயே வாங்காத குமராயி, வேகாத வெயில்லே காரேறி பாளையங்கோட்டை போயிருக்கா. இந்த அரியநாச்சி! தங்கச்சி மாயழகியை தங் கொழுந்தன் சோலைப்பயலுக்கு கட்டிவச்சா சொத்துப்பூராவும் அங்க தான்

போகும்.?" (அரியநாச்சி நாவல், ப.34) என்று கூறுவதன் மூலம் குடும்ப உறவில் சிக்கல் எழ ஆரம்பிக்கின்றதைக் காணமுடிகிறது.

## தந்தை – மகன் உறவுநிலை

அரியநாச்சி நாவலில் தந்தை மகன் உறவு நிலைகளுக்குப் பாண்டி- வெள்ளையத்தேவனும், கருப்பையா, மாயாண்டி ஆகியோரும் படைக்கப் பட்டுள்ளனர். இருவரும் உறவு நிலைத்திருக்க வேண்டும் என்னும் நிலையில் அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று நடப்பவர்களாக காட்டப்பட்டுள்ளனர்.

"எய்யா.. . .பாண்டி! என்யா அழுகிறே? அழுகாதப்பா சொல்லிக் கொண்டே வெள்ளையத்தேவன் அழுகிறான். தாயில்லாப் பிள்ளைகளை தவிக்கவிட்டு நான் ஜெயிலுக்கு வந்துட்டேன். நண்டு... சுண்டுமா.. நம்ம பிள்ளைகளை நாதியத்து விட்டுவிட்டு வந்தோமே! ஏம் பிள்ளைக மூணும் என்ன செய்துகளொ.. ஏது செய்துகளோன்னு இராவும், பகலும் உங்க நெனப்ப தாம்ப்பா! கண்ணீர் நிறையச் சிவந்த கண்கொண்ட மகனைப்பார்த்தா" (அரியநாச்சி நாவல், ப.35) என்பதிலிருந்து தந்தை மகனுக்கான உறவின் நிலை சங்கமத்திருப்பதை உணரமுடிகிறது.

## தந்தை – மகள் உறவுநிலை

வருங்காலச் சமுதாய உறுப்பினர்களை உருவாக்கும் பணியாகிய குழந்தைகளைப் பெறுதலும், அக்குழந்தைகளைச் சிறந்த சமுதாய உறுப்பினர்களாக மாற்றுதலும், குழந்தைகளைச் சமூகமயமாக்கலும், பெற்றோர்களின் கடமையாக இருந்து வருகின்றது. அவ்வகையில் ஒவ்வொரு குடும்பத்திலும் தாய் மகன் உறவை விட தந்தை மகள் உறவுநிலை மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக அமைகின்றது. தனிக்குடும்பமாக இருந்தாலும், கூட்டுக்குடும்பமாக இருந்தாலும் தந்தைக்கும் மகளுக்குமான உறவு எல்லையற்ற உணர்வுகளைத் தாங்கி வருகின்றதை நாவல் காட்டுகிறது.

வெள்ளையத்தேவனின் மூத்த மகளாக அரியநாச்சியும், இளைய மகளாக மாயழகியும் காட்டப்பட்டுள்ளனர். இருவரும் தந்தை மீது அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருந்தனர். ஜெயிலில் இருக்கும் தந்தையை காணச்சென்ற அரியநாச்சியிடம் குடும்பத்தைப் பக்குவமாக பார்த்துக் கொள்ளும் படியும், தம்பியாகிய பாண்டியிடம் வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் என்று கூறுமிடங்களில் தந்தை மகள் உறவைக் காணமுடிகிறது.

"அரியநாச்சி ... எம்மா! நல்லா இருக்கியாத்தா? வெள்ளையத்தெவனின் தொண்டை அடைத்தது. வயித்தப்பிள்ளைக்காரப் பிள்ள .. நீ எதுக்குத்தா இம்புட்டுத் தூரம் வந்தே! வெள்ளையத்தெவன் பேசுறது அரியநாச்சி காதிலே கேக்கலே"(அரியநாச்சி நாவல், ப.35) என்று மகள் மீது கொண்ட பாசத்தை வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர். மேற்குறித்த பகுதிகளில் இருந்து நாவலில் தந்தை மகன், தந்தை மகள் உறவுகள் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## முடிவுரை

குடும்ப அமைப்பின் தோற்றம் குறித்தான பதிவுகளும், குடும்பம் குறித்தான அறிஞர்களின் கருத்துக்களும் ஆணுக்கும் பெண்ணுக்கும் நிலைத்தான குடும்ப உறவு முறைகள் குறித்ததுமான கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. குடும்ப அமைப்பில் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் இடம் பெறும் நிலைகள் குறித்து நாவல் வழி ஆராயப் பெற்றுள்ளது. கணவன், மனைவி என்னும் நிலையில் பாண்டி, கொமராயி, சர்க்கரைத்தேவன் அரியநாச்சி ஆகிய நால்வரும் குடும்பத்தைப் பேணுவதிலும் பாசத்தை வெளிக்காட்டுவதிலும் சிறந்து விளங்கியதும் சுட்டப்பெற்றுள்ளது. அரியநாச்சி நாவலில் வெள்ளையத்தேவன் தனது மகள் அரியநாச்சியிடம் குழந்தை முதலே அன்பைப் பொழிபவராகவும், பாசத்தை வெளிப்படுத்துபவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார். நாட்டுப்புறக்கதையில் பெரும்பாலும் குடும்ப உறவுகள் மேலோங்கியிருக்கும் என்பதை அரியநாச்சி நாவல் படம் பிடித்துள்ளதையும். படைப்பாளர் உறவுகளிடம் கொண்ட ஈடுபாடும் நாவல் வழி வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. இராமநாதன் ஆறு, நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600 018. முதல்பதிப்பு - 1985.
2. இலக்குமிரதன், சோ, குடும்ப அமைப்பு, மணிவாசகம் பதிப்பகம், சென்னை 600108. திருத்திய பதிப்பு - 2000.
3. கலியாணசுந்தரனார். திரு.வி., பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600108.
4. கலைக்களஞ்சியங்கள், ம.பெ. பெரியசாமித் தூரன். தொ.ஆ, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1955.
5. திருவள்ளுவர், திருக்குறள், மணிவாசகா பதிப்பகம், கையடகக் பதிப்பு, 1995.
6. வேலராமமூர்த்தி, அரியநாச்சி, டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 600078, முதல் பதிப்பு – 2021.
7. வேலராமமூர்த்தி, குற்றப்பரம்பரை டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 600078, முதல் பதிப்பு - 2015.